**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.தே.கிருஷ்ணமூர்த்தி, எம்.காம்., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்:08.04.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி – சாதாரணக் கூட்டம் 07.04.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 07.04.2020 அன்று சாதாரணக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்– 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவ2, நாள்.21.09.2009ல் தெரிவித்துள்ளவாறு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல் தொடர்பாக 2020–21ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வைக் கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அதனை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சாலையின் வகை | சாலையின் நீளம் | 2019–20ம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டணம். தீர்மான எண்.32, நாள்.12.03.2020 | 2020–21ம் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்படும் சாலை பராமரிப்பு கட்டணம் (5% உயர்வுக்கு பின்னர் | மேற்பார்வை கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | மண் மற்றும் மெட்டல் ரோடு | 0–30 மீட்டர்வரை | ரூ.1712 | ரூ.1798 | ரூ.1707 |
| 2. | மண் மற்றும் மெட்டல் ரோடு | 31–90 மீட்டர் வரை | ரூ.2689 | ரூ.2823 | ரூ.3757 |
| 3. | தார்சாலை | 0–30 மீட்டர்வரை | ரூ.3666 | ரூ.3849 | ரூ.2007 |
| 4. | தார்சாலை | 31–90 மீட்டர் வரை | ரூ.4644 | ரூ.4876 | ரூ.4057 |
| 5. | சிமிண்ட் சாலை | 0–30 மீட்டர்வரை | ரூ.4236 | ரூ.4448 | ரூ.2094 |
| 6. | சிமிண்ட் சாலை | 31–90 மீட்டர் வரை | ரூ.5210 | ரூ.5471 | ரூ.4132 |

**(ந.க.எண்.1758/2018/இ2)**

**தீர்மான எண். 39**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 2**

இந்நகராட்சி குடிநீர் விநியோக திட்ட மராமத்து பணிகள் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் **(Out sourcing)** ஒப்பந்தக்காரர் மூலம் இந்நகராட்சிப்பகுதியிலுள்ள தலைமை நீரேற்று நிலையம் , பெரியநாயகம் கோவில் திறந்த வெளிக்கிணறு, இடைநிலை நீருந்து நிலையம், பகிர்மான குழாய்கள் அடைப்பு திறப்பு பணிகள் **11/2019**ம் மாதத்துடன் முடிவு பெறும் நிலையில் மீண்டும் மேற்காணும் பணிகளை தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் **(Out sourcing)** ஒப்பந்தக்காரர் மூலம் 12/2019 முதல் 3/2020 வரை உள்ள காலத்திற்கு **2019–2020ம் ஆண்டு PWD** விலை விகித பட்டியலின் படி உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**9.98**/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ) குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மற்றும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 22.11.2019 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்கு.

மேற்காணும் பணிகளுக்கான செலவீனத்தொகைகளை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 995 /2020/இ1)**

**தீர்மான எண். 40**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 3**

கடையநல்லூர் நகராட்சி குடிநீர் விநியோக பணிகளுக்கு பணியாளர்கள் ரூ.998000/– மதிப்பீட்டில் ஒப்பந்தஅடிப்படையில் (Out sourcing) ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தும் பணிக்கு இந் நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 29.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு.APMA.காஜா,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | மதிப்பீட்டு சதவீதம் | ரூ.10000/–க்கான தேசிய சேமிப்பு பத்திரங்கள் சமர்பித்துள்ளார். |
| திருமதி. P.ஆயிசா,<br>ஒப்பந்தக்காரர்,<br>பேட்டை, திரநெல்வேலி. | 5.63% அதிகம் | ரூ.10000/–க்கான தேசிய சேமிப்பு பத்திரங்கள் சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டு சதவீதத்தில் கொடுத்துள்ள திரு.APMA.காஜா, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியத்தை கருத்திற்கொண்டும் மற்றும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 995/2019/இ1)**

**தீர்மான எண். 41**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 4**

கடையநல்லூர் நகராட்சி இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கும் TN72X8285 டேங்கர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற ரூ.31000/– மதிப்பீட்டில் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் 25.10.2019 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 12.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித்தொகை |
|---|---|---|
| ஸ்ரீ ஜெயராம் மோட்டார் ஒர்க்ஸ்,<br>55A, தென்காசி ரோடு,<br>அம்பாசமுத்திரம் 627401 | ரூ.29950/– | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை செலுத்த வரி விலக்கு சான்று சமர்பித்துள்ளார். |
| ஸ்ரீனிவாசா மோட்டார் ஒர்க்ஸ்,<br>திலகபுரம் மெயின்ரோடு,<br>அம்பாசமுத்திரம்–627401 | ரூ.30800/– | ரூ.310/– செல்லாண் எண்.141/001/19–20/000 நாள்.12.11.2019ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் ரூ.1050/– குறைவாக கொடுத்துள்ள ஸ்ரீஜெயராம் மோட்டார் ஒர்க்ஸ், 55A, தென்காசி ரோடு, அம்பாசமுத்திரம் என்ற நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 12.11.2019 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் குடிநீர் பிரிவில் இயங்கும் TN72X8285 டேங்கர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3677/2019/இ1)**

**தீர்மான எண். 42**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 5</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி அவர்களின் கடித ந.க.எண்.34/செமதொ/வி/2020 நாள்.15.02.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.3326/2018/ஆ–4 நாள்.27.02.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துலூளபடியும், தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனைகளை விளக்கும் பொருட்டு தினமணி நாளிதழில் மூன்றாமாண்டு சாதனை மலர்.2020ல் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019 மற்றும் 2019–2020ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண்.TVLTN60043701 நாள்.23.03.2020ன்படி ரூ.25099/–யை EXPRESS PUBLICATION (MADURAI) PRIVATE LIMITED என்ற பெயரில் பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1164/2020/இ1)**

**தீர்மான எண். 43**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 6</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி அவர்களின் கடித ந.க.எண்.39/செமதொ/வி/2020 நாள்.15.02.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.3326/2018/ஆ–4 நாள்.27.02.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துலூளபடியும், தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனைகளை விளக்கும் பொருட்டு தமிழ்முரசு நாளிதழில் மூன்றாமாண்டு சாதனை மலர்.2020ல் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019 மற்றும் 2019–2020ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண்.3300219057 நாள்.16.03.2020ன்படி ரூ.9450/–யை KAL PUBLICATION PVT.LTD என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1161/2018/இ1)**

**தீர்மான எண். 44**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 7</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி அவர்களின் கடித ந.க.எண்.38/செமதொ/வி/2020 நாள்.18.02.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திரநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.3326/2018/ஆ–4 நாள்.27.02.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துலூளபடியும், தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனைகளை விளக்கும் பொருட்டு தினகரன் நாளிதழில் மூன்றாமாண்டு சாதனை மலர்–2020ல் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019 மற்றும் 2019–2020ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண்.3300218145 நாள்.16.03.2020ன்படி ரூ.11970/–யை KAL PUBLICATION PVT.LTD என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1161/2018/இ1)**

**தீர்மான எண். 45**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 8**

கடையநல்லூர் நகராட்சி – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020ன் கீழ் பெரியாற்றுப்படுகையில் புதிதாக திறந்த வெளிக்கிணறு அமைக்கும் பணியை ரூ.2500000/– மதிப்பீட்டில் செய்வதற்கு திரநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ8/5044/2019 நாள்.29.11.2019ன்படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திரநெல்வேலி அவர்களின் செயல்முறை ந.க.எண். 562/2020/ஆ1, நாள்.26.02.2020ன் படி தொழிற்நுட்ப அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் மேற்படி பணியினை செய்ய 20.03.2020 அன்று மாவட்ட அளவில் மிண்ணணு ஒப்பந்தப்புள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித்தொகை |
|---|---|---|
| திரு.P. சாகுல் கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.001%<br>குறைவு | ரூ.25000/– IOB Bazzar KDNR D.D.No.132451 நாள்.19.03.2020ன் படி சமர்ப்பித்துள்ளார் |
| திரு.U.சேக் அப்துல் காதர்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 4.47%<br>அதிகம் | ரூ.25000/– IOB Bazzar KDNR D.D.No.132450 நாள்.19.03.2020ன் படி சமர்ப்பித்துள்ளார் |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.001% சதவீதம் குறைவாக கொடுத் திரு.P. சாகுல் கமீது, ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 3271/2019/இ1)

**தீர்மான எண். 46**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 9**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20ன் கீழ் ரூ.25,00,000/– மதிப்பீட்டில் பெரியாற்று படுகையில் புதிதாக திறந்த வெளிக்கிணறு அமைக்கும் பணிக்கான மிண்ணணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர், திரநெல்வேலி அவர்களின் வழியாக மாலை மலர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண். TNL-D20030023 நாள்.05.03.2020ன்படி ரூ.5376/–யை "MALAR PUBLICATIONS (P) LTD என்ற பெயரில் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 3271/2019/இ1)

**தீர்மான எண். 47**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 10**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20ன் கீழ் கடையநல்லூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட ஆல்சநேயர் கோவில் அருகில் நகராட்சி பூங்காவில் அங்காடிமையம் அமைத்தல் பணி ரூ.8,00,000/–ம் மதிப்பீட்டில் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/5044/2019 நாள்.16.03.2020ன்கடி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 3271/2019/இ1)

**தீர்மான எண். 48**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TN76P2758 வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய மன்றத்தின் பின்னேற்பினை எதிர்சோக்கி தனி அலுவலர் அவர்கள் 03.03.2020ல்

அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| ஸ்ரீ ஜெயராம் மோட்டார் ஒர்க்ஸ், 55A, தென்காசி ரோடு, அம்பாசமுத்திரம் 627401 | முன் வைப்புத்தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது | ரூ.49600/– |
| ஸ்ரீனிவாசா மோட்டார் ஒர்க்ஸ், திலகர்புரம் மெயின்ரோடு, அம்பாசமுத்திரம்–627401 | | ரூ.53700/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை ரூ.49600/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட ஸ்ரீஜெயராம் மோட்டர் ஒர்க்ஸ், 55A, தென்காசி ரோடு, அம்பாசமுத்திரம் என்ற என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

மேலும் பொதுமக்களின் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய உத்திரவு வழஂகயதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1166/2020/எச்1**

**தீர்மான எண். 49**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 12</u>**

புளியங்குடி நகராட்சியில் துப்புரவு ஆழ்வாளராக பணிபுரிந்து வரும் இந்நகராட்சியில் முன்னாள் துப்புரவு ஆய்வாளர் திரு.பி.வெங்கட்ராமன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட WP.No.956/2020 வழக்கினை எதிர்த்து வழக்காட திரு.எம் சரவணகுமார் அரசு வழக்கறிஞரை நியமனம் செய்த வகைக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.10000/–ஐ வழக்கறிஞருக்கு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 316/2020/சி1)**

**தீர்மான எண். 50**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 13</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் கீழ்க்கண்ட ஐந்து வாகனங்களுக்கு தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு சாலை வரி செலுத்த வேண்டியுள்ளதால் அதற்காகும் தொகை ரூ.22,261/–(ரூபாய் இருபத்தி இரண்டாயிரத்தி இருநூற்றி அறுபத்தி ஒன்று) மட்டும் செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வாகன எண். | சாலை வரி ரூ. | ஆன்லைன் சார்ஜ் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | TN 76 P 2758 | 7226 | 50 | 7276 |
| 2. | TN 76 B 1197 | 3040 | 50 | 3090 |
| 3. | TN 76 B 1222 | 3040 | 50 | 3090 |
| 4. | TN 72 U 2038 | 919 | 50 | 969 |
| 5. | TN 72 U 5204 | 510 | 50 | 560 |
| 6 | TN 76 AF 5635 | 7226 | 50 | 7276 |
| | | 21961 | 300 | 22261 |

**(ந.க.எண். 1442/2020/எச்1)**

**தீர்மான எண். 51**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 14</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை–28, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/ஜே1/2020 நாள்.09.03.2020ன்படி கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்க்கண்ட பொருட்கள் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதி தேவைப்படுகிறது.

இதவரை இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளக்கு கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து 34 நபர்கள் வந்துள்ளதால் கீழ்காணும் பொருட்கள் அவசர அவசியமாக தேவைப்படுகிறது. இதன் பொருட்டு 1) அரசு இணை செயலாளர், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண்.20139/MAIV(2)2019–1, நாள்.03.08.2019 2) நகராட்சி நிர்வாக ஆணையர்(நிர்வாகம்) சென்னை அவர்களின் கடிதம் எண்.29968/2018/OP3 நாள்.30.12.2013 மற்றும் விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் TamilNadu Multipurpose Indco Service, Thiruchirapalli சொசைட்டி நேரடியாக கொள்முதல் செய்ய அரசு ஆணை எண்.330 நாள்.03.05.91 ஆகியவைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே கீழ்க்கண்ட விபரப்படி தேவையான பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட TamilNadu Multipurpose Indco Service, Thiruchirapalli சொசைட்டி மூலம் வாங்கிட பிரிவு 15ன் கீழ் வழங்கப்பட்ட இவ்வலுவலக 18.03.2020ம் தேதிய உத்தரவிற்கு அனுமதியும் அதற்காகும் ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | அளவு |
|---|---|---|
| 1. | முகவுறை (காட்டன் துணியால் தைக்கப்பட்டது) | 200 எண்ணம் |
| 2. | லைசால் (Lysol) | 250லி |
| 3. | கையுறை காட்டன் மிக்ஸ்டு | 50 செட் |
| 4. | கையுறை (Synthetic washable) | 200செட் |
| 5. | முழு உறை(Apron synthetic rain coat model) | 15 எண்ணம் |
| 6 | மாப்பு முதல்தரமானது | 25 எண்ணம் |
| 7. | ஹேண்ட் சானிடைசர் | 15லி |
| 8. | பிளாஸ்டிக் வாளி 10 லி | 10 எண்ணம் |
| 9. | பிளிச்சங் பவுடர் | 2000 கிலோ |
| 10. | நீர்த்திய சுண்ணாம்பு | 2000 கிலோ |
| 11. | பிளாஸ்டிக் ஸ்பிரேயர் | 4 எண்ணம் |
| 12 | முகவுரை– திரும்ப பயன்படுத்த கூடியது | 500 எண்ணம் |

(ந.க.எண். 1452/2020/எச்1)

**தீர்மான எண். 52**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 15</u>**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.26, காமாட்சி அம்மன் கோவில் தெற்கு தெருவில் திரு.பகவதி என்பவரால் பெட்டிக்கடை வைத்து ஆக்கிரமிப்பு செய்திருப்பதினை சென்னை, உயர்நீதி மன்றம் மதுரை கிளை WP(MD)No. 11720 of 2019ன் மீது வழங்கப்பட்ட 16.05.2019ம் தேதிய நீதிமன்ற உத்திரவின் அடிப்படையில் அகற்றுமாறு கேட்டு சார்பு செய்யப்பட்ட இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.1650/2019/F1 நாள்.27.05.2019ல் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை ஆட்சேபித்து, மேற்கண்ட அறிவிப்பு சட்டப்படியானதல்ல என முறையீடு செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ள சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP(MD)No. 12880 of 2019ன் மீது இந்நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.M.ராஜாராஜன் அவர்கள் ஆஜராகுவதற்கும் மற்றும் அதற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1650/2019/எப்1)

**தீர்மான எண். 53**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 16</u>**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.23, நாடார் கிழத் தெரு, சர்வே வார்டு H, பிளாக் எண்.20, நகரளவை எண்.318 சர்க்கார் புறம்போக்கு தெரு என நில வகைப்பாடு செய்யப்பட்டுள்ள பகுதியில் திரு.மாரியப்பன், த/பெ. இசக்கி என்பவரால் கட்டிடம் கட்டி ஆக்கிரமிப்பு செய்திருப்பதினை அகற்றி ஏற்கனவே இருந்தவாறு கழிவுநீர் செல்வதற்கு வடிகால் வசதி ஏற்படுத்தி தருவதற்குரிய பரிகாரம் கேட்டு திரு.R.குருசாமி, த/பெ.ராமலிங்கதேவர் என்பவரால் சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP(MD)No. 5202 of 2019ன் மீது வழங்கப்பட்ட 23.04.2019ம் தேதிய நீதிமன்ற உத்திரவினை செயல்படுத்தப்படவில்லை என்பதற்காக திரு.R.குருசாமி என்பவரால் சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளை Cont.Pet.(MD).No.270 of 2020ன்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற உத்திரவிற்கிணங்க ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மேற்கண்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் இந்நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.M.ராஜராஜன் அவர்கள் ஆஜராகுவதற்கும் மற்றும் அதற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 415/2019/எப்1)**

**தீர்மான எண். 54**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 17</u>**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.9 ஜவஹர் தெருவில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் வால்வு தொட்டி மற்றும் வார்டு எண்.31 மேற்கு மலம்பாட்டை தெரு, ஆடுமாடு அடிக்குமிடம் வளாக எதிரே அமைந்துள்ள வால்வு தொட்டி மிகவும் சிதிலமடைந்து உள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி மேற்காணும் இரண்டு இடங்களில் உள்ள வால்வு தொட்டிகளை அகற்றிவிட்டு ரூ.1,40,000/– உத்தேச மதிப்பீட்டில் புதிதாக வால்வு தொட்டிகள் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1450/2020/இ1)**

**தீர்மான எண். 55**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 18</u>**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.14 பஜார் தெரு, ஹிதாயத்துல்லா மேல்நிலைப்பள்ளி வளாகத்தினை ஒட்டி தென்புறம் கழிவுநீர் வாறுகால் சிதலமடைந்து கழிவு நீர் செல்ல இயலாத நிலையில் மிகவும் சிதலமடைந்து உள்ளது. மேலும் வார்டு எண்.11, மாவடிக்கால் பிள்ளையார் கோவில் தெரு, குறுக்கு வடிகால் மற்றும் பாலம் மிகவும் சிதலமடைந்து கழிவு நீர் செல்ல முடியாத நிலையில் உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு அவசர அவசியம் கருதி மேற்காணும் இரண்டு இடங்களில் வாறுகால் மற்றும் சிறு பாலங்கள் புதுப்பித்து கட்டும் பணியினை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனத் தொகை ரூ.1,35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1451/2020/இ1)**

**தீர்மான எண். 56**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 19</u>**

கடையநல்லூர் நகராட்சி தலைமை பணியிடத்தில் புதிதாக 125KVA ஜெனரேட்டர் வாங்கி பொருத்தப்பட்டு முதல் கட்டமாக 27.03.2019 அன்று பரிசோதனை செய்யப்பட்டு இஞ்சின் ஆயில், டீசல் பில்டர் மற்றும் ஆயில் பில்டர் புதிதாக மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இந்நிலையில் தற்போது இரண்டாவது Service ல் இஞ்சின் ஆயில், டீசல் பில்டர் மற்றும் ஆயில் பில்டர் புதிதாக மாற்றம் செய்து முழு பரிசோதனை செய்யப்பட வேண்டும். ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/S.Arumuga Engineeing Services. No.74/1, Madurai road,

Singarathoppu Road, Tenkasi என்ற நிறுவனத்தின் மூலம் மேற்க் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனத்தொகை ரூ.8000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4610/2019/இ1)**

**தீர்மான எண். 57**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 20</u>**

இந்நகராட்சியின் 2020–2023 குத்தகை தொடர்பான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.31.03.2020ம் தேதிய விளம்பரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி வழியாக 17.03.2020 அன்று தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பர செய்யப்பட்டதற்கு தினமணி நாளிதழ் பட்டியல் எண்.TVLTN60043600 நாள்.17.03.2020ன்படி தொகை ரூ.26363/–ஐ வழங்க கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட தொகையினை Express Publication (Madurai) PVT.Ltd– க்கு வழங்க மன்றப் பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 823/2019/அ3)**

**தீர்மான எண். 58**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 21</u>**

2018–19ம் ஆண்டின் தணிக்கை கட்டணம் (வருவாய் நிதி பத்தி எண்.40ன் படி) ரூ.60600/– (ரூபாய் ஆறுபதாயிரத்து அறுநூரை அரசுக் கணக்கில் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4260/2014/அ3)**

**தீர்மான எண். 59**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 22</u>**

இந்நகராட்சியின் 2018–19ம் ஆண்டின் தணிக்கை அறிக்கைகள் 213 பக்கங்கள் X 5 நகல்கள் வீதம் மொத்தம் 1065 பக்கங்கள் ஒளி நகல் எடுத்து புக்பைண்டிங் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைதுறை உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி அலுவலகத்திற்கு வழங்கிய வகைக்கு தொகை ரூ.3645/–ஐ வழங்க மன்றப் பொருள் ஒப்புதலுக்கு

**(ந.க.எண். 4260/2014/அ3)**

**தீர்மான எண். 60**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 23</u>**

2018–19ம் ஆண்டு ஆண்டுக்கணக்குகளை உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையில் தணிக்கை செய்யப்பட்டு அதன் பின்னர் வெளியிடப்பட்ட வருவாய் நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி தணிக்கை அறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4260/2014/அ3)**

**தீர்மான எண். 61**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 24</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN76AF 5635க்கு தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு பழுதுகளை நீக்கம் செய்திடும் வகைக்கான உத்தேச செலவினம் ரூ.45000/–க்கும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிய தொகை செலுத்தி தகுதி சான்றிதழ் பெற ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியுடன் வாகன பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், பெற்றமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1441/2020/எச்1)**

**தீர்மான எண். 62**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 25</u>**

கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 12.01.2020ல் அன்று மரணமடைந்த திரு.க.ராமர், துப்புரவு பணியாளர் எண்.57 என்பவரின் சிறப்பு சேமநல நிதி சந்தா மற்றும் அதற்கான வட்டிதொகையினை தனக்கு வழங்க கேட்டு அன்னாரின் வாரிசுதாரான திருமதி. ரா.சுடலைமாடத்தி, கோரியுள்ளார்.

எனவே திரு.க.ராமர், துப்புரவு பணியாளர் எண்.57 என்பவரின் உரிய சிறப்பு சேமநலநிதி சந்தா மற்றும் வட்டித்தொகை ரூ.10646/– யை அன்னாரின் மனைவி திருமதி. ரா.சுடலை மாடத்தி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 941/ 2020/D1)**

**தீர்மான எண். 63**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 26</u>**

கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 07.06.2019ல் அன்று மரணமடைந்த திரு.சரவணன் துப்புரவு பணியாளர் எண்.77 என்பவரின் சிறப்பு சேமநல நிதி சந்தா மற்றும் அதற்கான வட்டிதொகையினை தனக்கு வழங்க கேட்டு அன்னாரின் வாரிசுதாரான திருமதி. ச.காளியம்மள், கோரியுள்ளார்.

எனவே திரு.சரவணன் துப்புரவு பணியாளர் எண்.77 என்பவரின் உரிய சிறப்பு சேமநலநிதி சந்தா மற்றும் வட்டித்தொகை ரூ.3134/– யை அன்னாரின் மனைவி திருமதி. காளியம்மள் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2770 /2019/D1)**

**தீர்மான எண். 64**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 27</u>**

கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் மொத்தம் தெருவிளக்குகளின் எண்ணிக்கை 2664 ஆகும். மேற்காணும் தெருவிளக்குகளை பராமரிக்க போதுமான மின் பணியாளர்கள் இல்லாததால் பணியாளர் செலவீனம் மற்றும் மின்சாதன கொள்முதல் செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனமதிப்பெற்று கடந்த 2005ம் ஆண்டு முதல் தொடர்ந்து தெரு விளக்குகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. அதனடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் முதன்மை பொறியாளர் அவர்களது கடித எண்.13899/2016/Do1 நாள்.02.03.2017ன்படி இந்நகராட்சி அனைத்து பகுதிகளிலுள்ள தெருவிளக்குகளை கடந்த 01.05.2017முதல் 31.04.2020 முடிய மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்க்கொள்ளும் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 31.04.2020 உடன் முடிவடைவதால் இப்பணியினை 2020ம் ஆண்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ஒரு ஆண்டிற்கு ரூ.34.00 இலட்சம் ஆகும். எனவே இப்பணியினை தனியார் வாயிலாக மேற்க்கொள்ளவும் அதற்கான ஓராண்டிற்கு ஆகும் செலவீனத்திற்கு நாகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள கருத்துருக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ)** மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் வாயிலாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதிப் பெற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு பணியினை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆ)** மேற்காணும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள கருத்துரு மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**இ)** மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1240 /2020/இ1)**

**தீர்மான எண். 65**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்– 28

1920–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் V சட்டத்தின் பிரிவுகள் 175, 176, 183, 197,199, 200, 201, 204, 207, 208, 249 மற்றும் 250 ஆகியவற்றின் கீழ் கட்டிட உரிமங்கள்,உரிம ஆணைகள் மற்றும் அனுமதிகள் மீதான கட்டணங்கள் நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு திருத்தப்பட்ட 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 321(2)–ன் படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.1) துறை அரசாணை (நிலை) எண்.18 நாள்:04.02.2019 தமிழ்நாடு அரசிதழ் எண்.43, நாள்:04.02.2019 ஆகியவற்றில் தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளதில் கட்டிட உரிமம் அனுமதி காலமான 3 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள் என மாறுதல் செய்துள்ளதால் கீழ்க்கண்டவாறு திருத்தி உரிமையாணைக் கட்டணங்கள் நிர்ணயம் செய்து திருத்தி அமைக்கப்பட்ட கட்டணங்கள் 01.01.2020 முதல் அமுல்படுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி களின் சட்டம், 1920–இன் பிரிவு | கட்டிட உரிமங்களின் விவரங்கள் | தற்போது நகராட்சியில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் கட்டண விவரம் | | | திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமங்களின் கட்டண விபரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | தொகை ரூ. | அளவு | காலம் | தொகை ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | | 7 |
| 1 | 175, 176,177 | (1) தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பிற்கு) | – | – | – | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 3,000.00 |
| | | (2) தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பு அல்லாத இனங்களுக்கு) | – | – | – | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 5,000.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 197(1) (அ) | 1.மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு மனை) | – | – | – | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 300.00 |
| | | | – | – | – | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 500.00 |
| | | 2. மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு அல்லாத மனை) | – | – | – | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 600.00 |
| | | | – | – | – | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 1000.00 |
| 3 | 197 (1), 175 முதல் 177 | (அ) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை உட்பிரிவு அல்லது மனைகள் ஒருங்கிணைப்பு அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம். | – | – | – | ஒவ்வொரு மனைக்கும் | ஒரு முறை | 300.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (ஆ)அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெறுவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம் | – | – | – | ஒரு முறை | ஒரு முறை | 20,000.00 |
| 4 | 197, 201, 215 | (1) மட்டப்பா கட்டிடம், கான்கிரீட் கூரை கட்டிடம், புதியதாக கட்டுதல், இடித்து திரும்பக் கட்டுதல் கூடுதல் கட்டுதல், மாறுதல் செய்தல் (கட்டுமானம் ஒரு பகுதி / ஒரு பகுதி ஆஸ்பெஸ்டாஸ் தகடு /தகரக் கட்டடமாகவும், ஒரு பகுதி மட்டப்பா கான்கிரீட் கூரை கட்டடமாகவும் இருப்பின் முழு மட்டப்பா கட்டடத்திற்குரிய கட்டண விகிதங்கள் அனுசரிக்கப்பட வேண்டும்) | | | | | | |
| | | குடியிருப்பு கட்டிடங்களுக்கு:– | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரை தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 170.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத் திற்கு | 200.00 |
| | | (ஆ) முதல் தள கட்டிடம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 255.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத் திற்கு | 300.00 |
| | | (இ) இரண்டாம் தள கட்டிடம் அதற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 340.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத் திற்கு | 400.00 |
| | | குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு– | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரைதளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 120.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 300.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (ஆ) முதல் தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 255.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 450.00 |
| | | (இ) இரண்டாம் தள கட்டிடம் அதற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 340.00 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 600.00 |
| 5 | | திட்ட அனுமதி, கட்டிட அனுமதி புதுப்பிக்க (அனுமதி காலத்திற்குள்) | – | – | கட்டிட அனுமதி கட்டணத்தில் அமைப்பு ஒப்புதல் கட்டணம் தவிர இதர | ஒருமுறை மட்டும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதிக் கட்டணத்தில் 100 சதவீதம் |
| 6 | 197 | (அ) பழைய கட்டிடங்களை இடித்து அகற்றுவதற்கு | – | – | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஒரு முறை | 50.00 |
| | | (ஆ)தெரு ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டிட கட்டுமான பொருட்கள் சேமித்து வைப்பதற்கு | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | ஒரு வாரம் | உரிமை யாணை தொகையில் 75 சதவீதம் | – | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிட அனுமதி கட்டணத் தொகையில் 75 சதவீதம் |
| 7 | 183(2) | (அ) வேணல் பந்தல் அமைக்க | – | – | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மார்ச் முதல் ஜூன் முடிய | 200.00 |
| | | (ஆ) யாதொரு பொது தெருவிலே வேறு எந்த பொது இடத்திலோ திருமணப் பந்தல் போன்ற தற்காலிக பந்தல் அமைக்க | | | | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | 7 நாட்கள் | 50.00 |
| | | (இ) கோயில் உற்சவம் அல்லது மத சம்மந்தமான வைபவங்கள் நடக்கும் காலங்களில் தற்காலிக பந்தல் அமைக்க | – | – | – | – | – | இலவசம் |
| 8 | 197 மற்றும் | பொது மக்கள் கூடும் சர்க்கஸ், சினிமா, நாடகம், | – | – | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் | 1 மாதம் | 50.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 207 | கேளிக்கை களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க அனுமதி வழங்க (எளிதில் தீப்பிடிக்காத பொருட் களினால்) | | | | அதன் பாகத்திற்கும் | | |
| 9 | 197, 201, 215 | (1) கழிப்பறை கட்ட | ஒவ்வொன்றுக் கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 85.00 | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 100.00 |
| | | (2) குளியலறை கட்ட | – | – | – | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 100.00 |
| | | (3) குளியலறை உடன் கூடிய கழிப்பறை கட்ட | – | – | – | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | (4) நச்சுத்தடை தொட்டி கட்ட (செப்டிக் டேங்க்) | ஒவ்வொன்றுக் கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 85.00 | ஒவ்வொன்றுக் கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 100.00 |
| | | (5) சுற்றுச்சுவர் 2.0 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டுவதற்கு | – | – | – | ஒவ்வொரு 10 மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 100.00 |
| | | (6) மாடிப்படி அமைக்க | – | – | – | ஒவ்வொரு தளத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 100.00 |
| 10 | 204 மற்றும் 213 | 1) கட்டிட அனுமதி வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 100.00 | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 150.00 |
| | | 2) கட்டிட அனுமதி உத்தரவு உண்மை நகல் வழங்க | – | – | – | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 100.00 |
| | | 3) மனைப் பிரிவு அனுமதி வரைபடம், முழுமைத் திட்ட வரைபடம், விரிவு அபிவிருத்தி திட்ட வரைபடம் நகல் வழங்கு வதற்கு | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 500.00 | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 1000.00 |
| | | (4) நகர வரை பட நகல் வழங்க — சிறியது | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 150.00 | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 500.00 A2 Size 400.00 A3 Size |
| | | (4) நகர வரை பட நகல் வழங்க — பெரியது | | | 250.00 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (5)நில உபயோக சான்று வழங்க | – | – | – | ஒவ்வொன்றுக் கும் | ஒருமுறை | 500.00 |
| | | (6) நகரளவை புலப்பட நகல் வழங்குவதற்கு | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 50.00 | ஒரு புல எண் பகுதி காட்டும் வரை படத்திற்கு | ஒரு முறை | 100.00 |
| | | (7) நகரளவை நில பதிவேடு நகல் வழங்க | ஒவ்வொன்றுக் கும் | ஒரு முறை | 50.00 | ஒரு முறை | ஒரு முறை | 100.00 |
| | | (8) நகர நில அளவை எல்லைகள் அளந்து காண்பிக்க (நான்குமால் அளவீடு செய்ய) | ஒவ்வொன்றுக் கும் | ஒரு அளவைக்கு | 120.00 | ஒவ்வொரு புல எண்ணி ற்கும் | ஒரு முறை | 200.00 |
| 11 | 186 | (1) பதிவு பெற்ற தொழில் வல்லுநர் (Registered Professionals) அனுமதி வழங்க மற்றும் புதுப்பிக்க | ஒருவருக்கு | நிதி ஆண்டிற்கு | 250.00 | ஒருவருக்கு | ஐந்து ஆண்டிற்கு | 5000.00 |
| | | (2) பதிவு பெற்ற தொழில் வல்லுநர் (Registered Professionals) அனுமதி வழங்குவதற்கு முன் வைப்புத் தொகை | ஒருமுறை | நிதி ஆண்டிற்கு | 500.00 | ஒரு முறை | – | 1000.00 |
| | | (3) தொலை தொடர்பு கோபுரங்களுக்கு அனுமதி வழங்குதல் | – | - | – | இனம் ஒன்றிற்கு | ஒரு முறை | 5000.00 |
| | | (4) முன் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு | ஒருமுறை | மூன்று ஆண்டு கள் | உரிமை யாணைத் தொகையில் 50 சதவீதம் | ஒரு முறை | ஐந்து ஆண்டுகள் | ஊரிமை யாணைத் தொகை யில் 50 சதவீதம் |
| 12 | 215(எ) | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க வைப்புத் தொகை (கட்டமைப்பு அமைக்கப்பட்ட விவரத்தினை அலுவலகத்தில் சமர்ப்பித்தப்பின் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்) | – | - | – | ஒருமுறை | – | 2000.00 |

**(ந.க.எண். 1227/2019/எப்1)**

**தீர்மான எண். 66**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 29</u>**

தற்போது கோரோனா வைரஸ் தொற்றுநோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இந்நகராட்சி பகுதியில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 01.04.2020 தேதி வரை வெளிநாட்டு

பயணிகள் 390 பேர் வெளி மாநில பயணிகள் 251 நபர்கள் சேர்த்து மொத்தம் 641 நபர்களும், அவர்களது குடும்பத்தினரும் தனிமை படுத்தப்பட்டுள்ளனர். இதில் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் குற்றாலம் விடுதியில் சிறப்பு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் பொருட்டு இந்நகராட்சிக்கு தேவைப்பட்ட கிருமிநாசினி மற்றும் இதர பொருட்கள் ந.க.எண்.1452/2020/எச்1 நாள்.18.03.2020 உத்தரவில் திருச்சி சொசைட்டிக்கு விநியோக உத்திரவு வழங்கப்பட்டது. பின்பு இதே அலுவலக கடிதம் 30.03.2020 தேதியில் கூடுதலாக தேவைப்பட்ட 5 டன் சண்ணாம்பு, 5 டன் பிளிச்சிங் பவுடர் மற்றும் லைசால் 2000லி சப்னை செய்யவும் உத்தரவிடப்பட்டது. பின்னர் மேற்படி நிறுவனத்தை பலமுறை தொடர்கொண்டும் இரண்டு நாட்களுக்குள் சப்ளை செய்வதாக விலைப்புள்ளியின் தெரிவித்தபடி இந்நிறுவனத்தார் 03.04.2020 வரை சப்ளை செய்யவில்லை. மேலும் தற்போது அதிகமான தேவையின் காரணமாக வாங்கி வழங்குவது காலதாமதம் ஆகம் என தெரிவித்தனர். ஆனால் இந்நகராட்சியில் கிருமி நாசினிகள், சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர் மற்றும் லைசால் குறைந்த அளவே இருப்பு இருப்பதை முன்னிட்டு மேற்படி கிருமி நாசினி தேவை உடன் அத்தியாவசியமாகிறது.

எனவே பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி அவசர அவசிய தேவையை முன்னிட்டு 30.03.2020 தேதி மேற்படி திருச்சி சொசைட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விநியோக உத்தரவை ரத்து செய்யப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்திற்கு தேவையான பொருட்கள் தொடர்ந்து சப்ளை செய்து வரும் The Thoothukudi District Cleaning Products Producer Service Industrial Co-operative Society ltd., 28. Muthananthapuram 1st street. Kovilpatti நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட பொருட்களின் விலை திருச்சி சொசைட்டிக்கு இவர்களுக்கும் விலை வித்தியாசம் இல்லாததால் அதே விலையில் தேவையான கீழ்க்கண்ட பொருட்களை அவசர அவசிய தேவையை கருதி The Thoothukudi District Cleaning Products Producer Service Industrial Co-operative Society ltd., 28. Muthananthapuram 1st street. Kovilpatti நிறுவனத்திடம் வாங்கிட விநியோக உத்திரவு வழங்கியதற்கு அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/– (ஒன்பது இலட்சம் மட்டும்)த்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குளோரின் திரம் | – 3500 லி |
| 2. | நீர்த்த சுண்ணாம்பு | – 5 டன் |
| 3. | பிளிச்சிங் பவுடர் | – 5 டன் |
| 4. | லைசால் | – 1000 லி |
| 5. | ஹேண்ட் சேனிடைசர் | – 50 லி |
| 6. | கருப்பு பினாயில் | – 500 லி |
| 7. | கையுறை | – 200 செட் |
| 8. | முக கவசம் துணியினால் தைக்கப்பட்டது | – 500 எண்ணம் |
| 9. | முழு உறை | – 5 எண்ணம் |

**(ந.க.எண். 1292/2020/எச்1)**

**தீர்மான எண். 67**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 30</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கடையநல்லூர் உரக்கிடங்கில் 18.03.2020ஆம் தேதி திடீரென ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்புத்துறையின் நேரடி வேண்டுகோளுக்கிணங்க தனியார் ஜேசிபி இயந்திரம் மூலம் நான்கு மணி நேரம் பயன்படுத்திய வகைக்கு ஆகும் செலவுத்தொகை ரூ.3200/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ) அவகர அவசியம் தேவையை முன்னிட்டு மேற்படி பணிக்கு நேரடியாக விலைப்புள்ளி கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன்விபரம் பின்வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைவிகிதம் (1 மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1. | சூர்யா எர்த் மூவர்ஸ் | 800 |
| 2. | S.M.எர்த் மூவர்ஸ் | 825 |
| 3. | ரோஷன் எர்த் மூவர்ஸ் | 850 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் M/S. சூர்யா மூவர்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று பணியினை செய்து முடித்ததற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1292/2020/எச்1)**

**தீர்மான எண். 68**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 31</u>**

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி இந்நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு விழிப்புணர்வு நோட்டீஸ் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள மாதிரி நோட்டீஸ்படி 10000 எண்ணம் அச்சடிப்பு செய்து பொதுமக்களுக்கு வழங்கிட ஆகும் செலவுத் தொகை ரூ.15500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) அவசர அவசியம் கருதி நோட்டீஸ் பிரிண்ட் செய்வதற்கு உள்ளூர் அச்சகத்தில் இருந்து நேரடியாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி 3 நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைவிகிதம் (1000 நோட்டீஸ் பிரிண்ட் செய்து தர) ரூ. |
|---|---|---|
| 1. | கிளாசிக் ஆப்செட்& கார்ட்ஸ், நியூ பஜார், கடையநல்லூர் | 1550 |
| 2. | M.K.பிரிண்டர்ஸ், மெயின் ரோடு, கடையநல்லூர். | 1800 |
| 3. | S.K.பிரஸ், மெயின் பஜார் ரோடு, கடையநல்லூர். | 1900 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் கிளாசிக் ஆப்செட்& கார்ட்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1292/2020/எச்1)**

**தீர்மான எண். 69**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 32</u>**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.24 கட்டி விநாயகர் கோவில் தெரு மேல்பகுதி, மாதாங்கோவில் தெரு மேல் பகுதி, மாதங்கோவில் தெரு மேல்பகுதி மற்றும் வார்டு எண்.26, வடக்கத்தி அம்மன் கோவல் தெரு மற்றும் கோட்டை மந்தை தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகத்தின் போது ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதிகளுக்கு இரவு நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் போது மட்டுமே குடிநீர் கிடைத்து வருகின்றது. பகல் பொழுதில் குடிநீர் விநியோகம் செய்யும் போது கிடைப்பதில்லை. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற்கொண்டும் பஜனை மடம் தென்வடல் தெரு மற்றும் மாதாங்கோவில்

தெரு கீழ்பக்கம் ஆகிய தெருக்களில் 4”CI வால்வு –2 மற்றும் CI பிளாஞ்சு சாக்கெட் டெயில் பீஸ்–4 எண்ணம் புதியது வாங்கி பொருத்துவதற்கும் கட்டி விநாயகர் கோவில் தெரு மற்றும் கோட்டை மந்தை தெரு சந்து ஆகியவற்றில் டம்மி அமைப்பதற்கும், மாதாங்கோவில் தெரு, கோட்டை மந்தை தெரு ஆகியவற்றை இணைப்பு செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.25000/க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1160 /2019/இ1)**

**தீர்மான எண். 70**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 33</u>**

இந்நகராட்சி குடிநீர் விநியோகம் மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. குடிநீர் திட்ட மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகளான 13 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் வால்வுகள் அடைத்தல், திறத்தல், இடைநிலை நீர் உந்து நிலையம், தலைமை நீரேற்று நிலையம் பெரியாற்றுப்படுகை, பெரிய நாயகம் கோவில் தலைமை நீரேற்று நிலைய கிணறு, கல்லாற்று படுகை திறந்த வெளிகிணறு மற்றும் தரை மட்ட நீர்தேக்கத் தொட்டி ஆகியவைகளை மராமத்து பராமரிப்பு பணிகளை செய்வதற்கு உத்தேசமாக 16 எண்ணம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis) 5/2020 முதல் 9/2020 வரை 5 மாதங்களுக்கு பணியிலமர்த்தி குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.990000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிகளுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1541 /2020/இ1)**

**தீர்மான எண். 71**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்)தே.கிருஷ்ண மூர்த்தி,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**